தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 407

|| श्रीः ||

|| पट्टीश्वरमाहात्म्यम् ||

பட்டீஸ்வர மாஹாத்மியம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

1999

விலை : ரூ. Rs. 25

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 407

|| श्रीः ||

|| पट्टीश्वरमाहात्म्यम् ||

பட்டீஸ்வர மாஹாத்மியம்

பதிப்பாசிரியர் :

ஸாஹித்ய சிரோமணி

திருமதி. எஸ். இராஜலக்ஷ்மி, எம். ஏ.,

ஸம்ஸ்க்ருத பண்டிதர்

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

1999 விலை : ரூ. 22—00

பட்டீஸ்வர மாஹாத்மியம்

0407

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

Sarasvati Mahal Library.Thanjavur-2016

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	பட்டீஸ்வர மாஹாத்மியம்
பதிப்பாசிரியர்	:	திருமதி. எஸ். இராஜலக்ஷ்மி
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.
வெளியீட்டு எண்	:	407
மொழி	:	சம்ஸ்க்ருதம், தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	அக்டோபர், 1999
தாள்	:	10.9 கி. கி. சேஷசாயி
நூல் அளவு	:	25 × 19 செ. மீ.
பக்கங்கள்	:	64
படிகள்	:	250
எழுத்து	:	16 புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் அச்சகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	தல புராணம்
விலை	:	ரூ. 22—00

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வெளியீட்டாளர் முகவுரை

இந்தியத் திருநாட்டில் பல்வேறு சிறப்பு மிக்க புனிதத் தலங்கள் திகழ்கின்றன. இத்தலங்களின் சிறப்புக் களையும், அவற்றின் புனிதத் தன்மைகளையும் புராணங் களும், தலபுராணங்களும் எடுத்து இயம்புகின்றன. இத்தகைய தலபுராணங்களில் பட்டீஸ்வரமாஹாத்மியம் என்னும் நூல் தற்போது வெளிவருகிறது.

இத்தலப்புராணத்தில் "பட்டீஸ்வரம்" என்று பெயர் வரக் காரணம், பழையாறை மாநகரின் சிறப்பு முதலியன இலக்கிய, வரலாற்றுச் சான்றுகளுடனும், கதைச் சுருக்கத்துடனும் வெளிவருகிறது. சரசுவதி மகால் நூலகத்தில் சம்ஸ்கிருதப் பிரிவில் காணப்படும் "பட்டீஸ்வர மாஹாத்மியம்" என்னும் சுவடி பி. எண். 11368 தற்போது முதல் முதலாக நூல் வடிவில் வெளிவருகிறது.

இந்நூல் ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பயன்படும். இப்பணியினை இந்நூலக சம்ஸ்கிருதப் பண்டிதர் திருமதி எஸ். இராஜலக்ஷ்மி அவர்கள் சிறந்த முறையில் பதிப்பித்துள்ளார். அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இந்நூல் வெளிவர உறுதுணையாக இருந்த நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் நூலக அச்சகப் பணியாளர்களுக்கும் ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்நூலை அச்சிட நிதியுதவி வழங்கிய நடுவண் அரசுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர். **மூ. இராசாராம்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
15—10—1999

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

முகவுரை

சிறப்பும் செல்வமும் வாய்ந்த நமது தேசமாகிய பரத கண்டத்திலே பரமபதியாகிய சிவபெருமான் திருக்கோயில் கொண்டு வீற்றிருந்து அருளும் ஸ்தலங்கள் ஆயிரத்தெட்டு என்று ஆன்றோர் கூறுவர். காலமுறைப்படி இலக்கிய வரலாற்றை நன்கு ஆராயும்போது தமிழ், சம்ஸ்கிருத இலக்கியங்களில் பாடப்பெற்ற தலங்கள் மிகப்பழங்காலந்தொட்டே அதிகரித்து வந்த முறைமையையும், அந்தந்த காலகட்டங்களில் தேவாரத் தலவரலாற்றுச் செய்திகள் பெருகிவந்தமையும் தெரிந்துகொள்ளலாம். எடுத்துக்காட்டாக சங்க காலமுதல் தேவார காலத்துக்கு முற்பட்ட சிலப்பதிகாரம் போன்ற காவிய காலம்வரை பாடல்பெற்ற ஸ்தலங்கள் எங்ஙனம் படிப்படியாக எண்ணிக்கையில் மிகுதியாயின என்பதும், அத்தல வரலாற்றுச் செய்திகள் பெருகிய வகையும், தமிழ் இலக்கிய நூல்களை வரலாற்று ரீதியில் ஆராய்வோருக்கு நன்கு புலனாகும். வேதம் முதலாய் புராணம் ஈறான வடமொழி இலக்கிய வரலாற்றுச் செய்திகளையும், சங்க நூல்கள் முதல் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருமந்திரம் வரை தமிழ் இலக்கிய வரலாற்றுச் செய்திகளையும் தேவாரம் பாடப்பெற்ற தலங்கள் கூறப்பட்டுள்ளன. தற்போது வெளிவரும் பட்டீஸ்வர மாஹாத்மியம் என்னும் இந்நூல் ஞானசம்பந்தரால் பாடல்பெற்ற தலமாகும். தலபுராணங்கள் தமிழ் இலக்கியத்தில் சிறந்ததோர் இடம் பெறுகின்றன.

தலபுராணங்களும், புராணங்களுங் கதைகளின் மூலம் பக்தியை — இறையுணர்வை வளர்க்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் எழுதப்பெற்றவை. புராணங்களில் உவமை, கற்பனை, வருணனை என வரும் இடங்களில் எல்லாம் சாத்திரக் கருத்துக்களே காணப்படுகின்றன. ஆகவே சாத்திரங்களை விளக்கும் சாத்திர இலக்கியமாகவும் புராணங்களைக் கொள்ளலாம். புராணத்தினைப் பொருள் அடிப்படையில் நோக்குகின்றபோது இவ்விலக்கியம் நீதி இலக்கியமாகவும், பக்தி இலக்கியமாகவும், சாத்திர இலக்கியமாகவும் கொள்ளத்தக்க வகையில் காட்சி அளிக்கின்றது. இத்தகைய பொருள் சிறப்பினைத் தாங்கித் திகழும் புராண இலக்கியத்தின் இலக்கணத்தைப்பற்றி, குறிப்புக்களைத் தமிழ்ப் பாட்டியல் நூல்கள் தருகின்றன. இத்தன்மையதான

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இலக்கியம் பற்றிய குறிப்பினைத் தொல்காப்பியத்திலும் காணமுடிகிறது. பழமை அல்லது தொன்மையான ஒரு பொருளினை மையமாகக் கொண்டு புராணங்கள் எழுந்தன. புராணம் என்ற சொல்லிற்கே பழமை தொன்மை என்பது பொருளாகும். பழமையான பொருளைக்கொண்டு பாடப்பெறுவன புராணங்கள்.

தனியாக ஒரு கடவுளையோ அடியவரையோ குறிக்காமல் ஒரு தலத்துடன் சார்த்திப் பாடப் பெறுமானால் அவை தலபுராணங்கள். புராணங்கள் இறைவன் செயலை வியந்து பேசுகின்றன. தலபுராணம் இறைவன் எழுந்தருளியுள்ள தலத்தை வியந்து பாடும். கொடியவர்களும், அதிகாரச் செருக்கு மிகுந்தவர்களும் துன்புற்று மனந்திருந்தி இக்கோவில்களுக்கு வந்து வழிபட்டு நல்லவர்களாக மாறியதாகவே தல புராண இலக்கியத்தின் கதைக் கூறும் போக்கு அமைந்திருக்கின்றது. தல புராணத்தின் நோக்கம், புராணப் புலவர் பாட முனைந்த தலம், தீர்த்தம், மூர்த்தி, விழா என இவற்றினைச் சிறப்பித்துக் காட்டுதலே ஆகும். மேலும் ஒவ்வொரு தல புராணங்களை நாம் பார்க்கும் போது அவ்வூரின் சிறப்பு, அவ்வூரின் வரலாறு மற்றும் பல சிறப்புகளைப் பற்றி நாம் அறிய முடிகிறது.

இப்போது வெளிவரும் நூலாகிய பட்டீஸ்வர மாஹாத்மியம் என்ற தலவரலாறு தேனுபுரீஸ்வரர் கோவிலின் சிறப்பைக் குறிப்பிடுகிறது. இக்கோவில் இடம் பெற்றுள்ள 'பட்டீஸ்வரம்' என்ற நகரம் சோழப் பேரரசின் தலைநகரங்களில் ஒன்றாகவும், சோழப்பெருந்தேவரின் இரண்டாம் தலைநகராகவும், சோழ அரச குடும்பத்தினர் வாழ்ந்த இடமாகவும் இருந்த பெருமையும், தொன்மையும் உடையது.

காமதேனுவின் கன்றாகிய பட்டி வழிபட்டு பேறுபெற்றமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது. ஸ்ரீராமருக்கு சாயா ஹத்தி தீர்த்த தலம். சுவாமி - பட்டீஸ்வரர், தேனுபுரீஸ்வரர், அம்பிகை பல்வளை நாயகி தீர்த்தம் ஞான தீர்த்தம். இத்தலத்தில் வேறொரு வீதியில் சக்தி முற்றம் என்னும் தலம் இருக்கிறது. இராப்பட்டீச்சரம், பேரூர் பட்டீச்சரம் என வேறு இரண்டு தலங்கள் இருப்பதால் வேறுபாடு அறிதற்கு இது பழைய பட்டீச்சரம் என்று கூறப்படும்.

சுவடியின் வரலாறு :

பட்டீஸ்வர மாஹாத்மியம் என்னும் இந்நூல் சரஸ்வதி மஹால் நூலகத்தில் வடமொழிப் பிரிவில் B No. 113.8, D. No. 10045 என்ற எண்ணில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றது. இந்நூல் ஓலைச் சுவடியில் கிரந்த எழுத்தில் உள்ள சுவடியாகும். சுவடி சுமாரான நிலையிலும் எழுத்து தெளிவாகவும் உள்ளது.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

நன்றியுரை :

இந்நூலைப் பதிப்பிக்கும் பணியை எனக்கு நல்கிய நூலக இயக்குநரும் மாவட்ட ஆட்சியருமான முனைவர் மூ. இராசாராம், இ. ஆ. ப., அவர்களுக்கும், இந்நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் M. A., அவர்களுக்கும், பதிப்பிட்டு மேலாளர் திரு. A. பஞ்சநாதன், M.A., M.L.I.S., அவர்களுக்கும் இந்நூல் சீரிய பதிப்பாக வெளிவர எனக்கு உதவி புரிந்த திரு. N. சீனிவாசன், திரு. A. வீரராகவன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனைச் சிறப்பாக அச்சிட்ட சரசுவதி மகால் நூலக அச்சகப் பிரிவினர் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸாஹித்ய சிரோமணி

திருமதி. **எஸ். இராஜலக்ஷ்மி,**

ஸம்ஸ்கிருத பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
11-6-99

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பட்டீஸ்வர மாஹாத்ம்யமும்
பழையாறையின் வரலாற்றுச்சிறப்புகளும்

பட்டீஸ்வரம் பழையாறையின் ஒரு பகுதியாக விளங்கியது. பழையாறை என்பது சோழ மன்னர்களின் தலைநகராக விளங்கியதுடன் மாபெரும் நிலப் பரப்பை கொண்டதாக அமைந்திருந்தது, இவ்வூர் கும்பகோணத்தின் தென் மேற்கே நான்கு கி. மீட்டர் தொலைவில் உள்ள சிற்றூராக இன்று காணப் படுகிறது. சோழர்கள் காலத்தில் இப்பழையாறை கும்பகோணம் நாணயக்காரத் தெரு தொடங்கி, முடிகொண்டான் ஆறு வரை இதன் தெற்கெல்லையாக இருந்து பரந்து விரிந்திருந்தது. ஆனால் சோழர்காலப் பழையாறையின் பகுதிகள் இன்று வெவ்வேறு சிற்றூர்களாக ஒன்றுக்கொன்று தொடர்பின்றி காட்சியளிக்கின்றன, தற்காலத்தின் பழையாறை, பட்டீச்சரம், திருச்சத்திமுற்றம் அரிச்சந்திரம், பாற்குளம், முழையூர், இராமநாதன்கோவில் தாராசுரம், கோணைப்பெருமாள் கோவில் ஆரியப்படையூர், பம்பப்படையூர், புதுப்படையூர், மணல் படையூர், ராஜேந்திரன்பேட்டை என்று வழங்கும் தற்காலத்திய கிராமங்கள், சோழமன்னர்களின் காலத்தில் ஒரே இடமாக பெருநகரமாக விளங்கின என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. பழையாறை என்பதற்கு பழமையான பெயர் 'ஆறை' என்பதாகும், இதனை தெய்விகப் புலவர்களின் இறைப் பாடல்கள் வாயிலாக அறிய முடியும். பழமையான நகரம் என்ற அடைமொழியுடன் கூடி பழையாறை என்ற பெயர் பெற்றது. இந்நகரம் இரண்டாம் நந்திவர்மன் காலம் முதலாக நந்திபுரம். நந்திபுரி என்று வழங்கலாயிற்று. சோழர்கள் காலத்தில் இப்பெயர் பழையாறையாகிய நந்திபுரம் என்று வழங்கலாயிற்று. முதலாம் இராஜேந்திரன் (1012 — 1044) காலத்தில் "முடிகொண்ட சோழபுரம்" என்றும், வீரராஜேந்திரன் காலத்து 'ஆகவமல்லகுல காலபுரம்' என்றும், இரண்டாம் இராஜராஜன் (1146 — 1163) காலத்து ராஜராஜபுரம் என்றும், நாயக்க மன்னர்கள் காலத்தில் 'முடிகொண்ட சோழபுரம்' என்றும். பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது. பழையாறையின் ஒரு பகுதியாக விளங்கிய பட்டீச்சரம் என்பது ஆலயப்

பரு. — ப. ii

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பெயரால் வழங்கி வந்தது என்றும் அறிய முடிகிறது. அந்நாட்களில் தலங்கள் வேறு பெயரிலும், கோவில்கள் வேறு பெயரிலும் அழைக்கப்பட்டு வந்திருக்கின்றன. உதாரணமாக திருச்செங்காட்டாங்குடி என்ற ஊரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானின் ஆலயத்திற்கு கணபதிச்சரம் என்ற பெயரிலும்; தஞ்சாவூரில் எழும்பியுள்ள ஆலயத்திற்கு ஸ்ரீ ராஜராஜேச்வரம் என்றும் பெயரிடப்பெற்றுள்ளதைப் போல பழையாறை என்பது நகரமாகவும் கோவிலின் பெயர் பட்டீச்சரம் என்றும் பெயர் பெற்றது. இது நாளடைவில் ஊரின் பெயராகவே மக்களால் வழங்குவதாயிற்று. இதனைக் கீழே காணும் தேவாரப் பாக்களால் அறியலாகும்.

மடைக்கயல் வயற் கொண் மழ
 பாடிநகர் நீடுபழை யாறை அதனுள்
படைக்கொடு கரத்தன் மிகு
 பட்டிசரம் ஏத்த வினை பற்றுதலே" எனவும்

மந்தமலி சோலைமழ பாடிநகர்
நீடுபழை யாறை அதனுள்
 பந்தமுயர் வீடுநல பட்டிசரம்" எனவும்,

அமையும் திருப்பாடல்களுக்கு "மழபாடியாகிய பகுதியைத் தன்னுள் கொண்ட பழையாறை மாநகரில் இருந்த பட்டீசரம் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

சிற்பமும் ஓவியமும்;

பழையாறை நகரில் நிலவிய ஆலயங்களுள் இன்று இருப்பன சிலவே யாகும். அவற்றுள்ளும் தொன்மைச் சிறப்புக் குன்றாதன மிகச் சிலவே. எனினும் பழையாறை ஆலயங்கள் சோழர் முதலான தமிழ் மன்னர்தம் சிற்ப ஓவிய அறிவைப் புலப்படுத்துவனவாக அமைந்த அருங்கலைச் செல்வங்களைத் தம்முள் பெற்றுள்ளன. பழையாறை நகரில் உள்ள பல்லவர் கால ஆலயங்களுள் பட்டிசரமும், சத்தி முற்றமும் குறிக்கத்தக்கனவாகும். இவ்வாலயங்களில் காலத் தொன்மையுடைய கருவறை முதலாகத் தஞ்சை நாயக்கர் காலத்திய மண்டபங்கள் வரையில் பல்வேறு காலக்கட்டங்களின் கலைப் பணிகளைக் காட்டும் கட்டடப் பகுதிகள் உள்ளன. நந்திபுர விண்ணகரம் பல்லவர்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

காலக் கலையமைப்பினைக் காட்டுகிறது. நந்திபுர விண்ணகரின் ஸ்ரீ விமானம் மிகமிக அழகுடையதாகும். சோழரின் கோயிற் கட்டுமானத் திறனை மகோன்னதமான கலைச் சிறப்பினைக் காட்டுகிறது. தாராசுரத்து இராஜராஜேஸ்வரம் ஆறை வடதளியில் உள்ள அர்த்தநாரீஸ்வரர் திருவுருவம் தாராசுரம் கோயிலில் உள்ள கண்ணப்பர் திருவுருவம், மோகினியின் சிலைகள் முதலான உருவங்கள் முதலியன கண்டு மகிழத்தக்க கலின் கலைச் செல்வங்கள். அரண்மனை வாயிலில் இருந்ததாகக் கூறப்படும் சிலைகளில் பல பட்டீசரம் திருக்கோயிலிலுள்ள சுற்றாலயங்களில் உள்ளன. கம்பீரமாக அமைந்துள்ள அக்கலைக் களஞ்சியங்கள் பார்ப்பவர்க்குப் பழையாறையின் மேன்மையைப் பறைசாற்றுகின்றன. பழையாறை சோமநாதராலயத்தில் உள்ள துர்க்கை, கயிலாயநாதர், உமையொருபாகர் உருவங்கள் கலை எழில் மிக்கவை.

தலவரலாற்றுச் சிற்பங்கள் :

திருக்கோயில்களில் தலவரலாற்றை ஒட்டியமையும் சிற்பங்கள் காணப் படும். இவற்றுள் நந்திபுர விண்ணகரில் கருவறையில் நந்தி வழிபடுவதாக அமைந்துள்ள சிற்பம் குறிக்கத்தக்க இடம்பெறுவது' பட்டீஸ்வரத்தில் காமதேனுவின் மகளான பட்டி எழில் சொரிந்து வழிபடுவதுபோலத் தூண் ஒன்றில் அமைந்துள்ள சிற்பமும், சக்தி ஒற்றைக்காலால் தவம் செய்வதுபோல செய்வதுபோல ஒரு சிற்பமும் உள்ளன. இத்தகைய சிற்பங்கள் பட்டீஸ்வர மகாத்மியம் என்ற தலபுராணத்தின் தல வரலாற்றுச் சிற்பங்களாகும். இவை காலத்தால் பிற்பட்டனவே எனலாம்.

பட்டீஸ்வரம் அம்மன் கோயில் மண்டபத்தின் மேற்புறத்தில் தொங்கும் கல் ஒன்று சிற்பிகளின் கலையறிவைக் காட்டுகிறது. இது சுழலக்கூடிய வட்டமான கல்லாகும். இது கருங்கல் சங்கிலிகள் உடையதாகச் செப்பனிடப் பட்டுள்ளது. இதன் சுழலும் தன்மை வியப்பளிக்கக்கூடியதாக உள்ளது.

வரலாற்று நாயக்கர்கள் :

பழையாறை, சோழ மன்னர் பலராலும் திருப்பணிகளுற்ற கோயில் மாநகரம். இங்குள்ள ஆலயங்களுக்கு அரும்பணியாற்றிய புரவலர் பலர்' அமர்நீதி நாயனார், திருமலையதேவ மகாராசன், ரகுநாத நாயக்கர், கோவிந்த தீக்ஷிதர் முதலியவர்கள் ஆவர். ரகுநாத நாயக்கர் (1600—1631)

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வரை அரசாட்சி புரிந்தவர். இவர் இறைப்பணியில் பேரீடுபாடு கொண்டவர் என்பதைக் குடந்தை இராமசாமி கோயில் பணிகளும், மகாமகக் குளக்கரை மண்டபச் சிற்பங்களும் காட்டும். இரகுநாத நாயக்கன் பழையாறையில் ஆலயப்பணி ஆற்றியவனாதல் வேண்டும். நாதன் கோயில் எனப்பெறும் நந்திபுர விண்ணகரில் காணப்பெறும் அரசன், அரசியின் சிலைகள் இரகுநாதர் மற்றும் அவரின் மனைவியும் என்பர்.

கோவிந்த தீக்ஷிதர் : கோவிந்த தீக்ஷிதர், அச்சுதராயர், ரகுநாதர் என்னும் இரண்டு நாயக்க அரசர் காலத்திய அமைச்சர். இவர் அமைச்சராக இருந்து ஆற்றிய பணிகளையும், அரசியல் அறிவினையும் இவருடைய மகனாகிய யக்ஞநாராயண தீக்ஷிதர் என்பவர் எழுதிய சாஹித்ய ரத்னாகரம் என்னும் நூல் விரிவாக கூறுகிறது. கோவிந்த தீக்ஷிதர் மகாமகக் குளத்தை செப்பனிட்டார். இவர் ஹரிவம்சசார சரிதம் என்னும் நூலையும், சங்கீத சுதா நிதி என்னும் இசை நூலையும் இயற்றியுள்ளார்.

கோவிந்த தீக்ஷிதர் திருப்பணிகள் ; கோவிந்த தீக்ஷிதர் பட்டீஸ்வரம் திருக்கோயிலில் பல திருப்பணிகளைச் செய்தார். அம்மன் கோயில் அலங்கார மண்டபம், அம்மன் கோயில் திருப்பணிகள் இவர் ஆற்றியனவேயாகும். அம்மன் கோயில் அர்த்த மண்டபத்தில் கோவிந்த தீக்ஷிதருடைய முழு உருவச் சிலை அஞ்சலி ஹஸ்தத்துடன் காணப்பெறுகின்றது. இவருடைய மனைவியார் உருவமும் காணப்பெறுகிறது. இரண்டாம் கோபுர நுழைவாயிலில் உள்ளதொரு பட்டீஸ்வரம் கல்வெட்டு 'கோவிந்த தீக்ஷிதரைத் தீக்ஷித சுவாமி' எனப் பெருமையுடன் பேசுகிறது. இச்சாசனம் கி. பி. 1634க்குரியதாகும்.

பழையாறையும் இலக்கியங்களும் :

பழையாறை நகரினையும், அதன் பகுதிகளையும் குறிக்கும் இலக்கியங்கள் பல. அவற்றுள் சில இந்நகரின் பெயரினை மட்டும் குறிப்பனவாகவும், வரலாற்றுப் பெருமையைக் குறிப்பதாகவும், சமயப் பெருமையை சாற்றுவனவாகவும், புராணச் செய்தியை கூறுவனவாகவும் செய்திகள் பல உள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

"பாடுவகர் பாடல் உகப்பாய் பேற்றி!
பழையாற்று பட்டீச் சுரத்தாய் போற்றி!" (திருநாவுக்கரசர்)

எனப் போற்றும் பாடல் பகுதி பட்டீஸ்வரம் பழையாற்றின் ஒரு பகுதியாதலை காட்டும்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

க்ஷேத்திரக் கோவை பிள்ளைத்தமிழ். காஞ்சிபுரம் சிதம்பர முனிவர் என்பவரால் பாடப்பெற்றது. ஒவ்வொரு பாடலில் ஒவ்வொரு தலப்பெருமை கூறப்பெற்றுள்ளது. பட்டீஸ்வரம் பற்றிய பாடல் பின்வருமாறு :

''வெள்ளைமுத் தின்பந்தர் அருளியல் வருடமுகை
வெள்விடையொ துங்கிநிற்பப்
பார்த்துமகிழ் பட்டீச ரருள்குமர நாயகன்
பவளவாய் முத்தமருளே
பச்சைமால் மகிழ்முருக சச்சிதாநந்தவேள்
பவளவாய் முத்தமருளே.''

திருப்பழையாறைப்பதிற்றுப்பத்தந்தாதி என்னும் நூல், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றதாகும். இந்நூல் பட்டீஸ்வரம் தொடர்பான தலவரலாற்றுச் செய்திகளைக் கூறுவதாகும். திருஞானசம்பந்தப் பெருமானுக்கு முத்துப்பந்தல் தந்தமையும், நந்தி விலசியதாக கூறுவது ஒரு சிறப்புச் செய்தி.

முத்துப்பந்தர் பெற்றது :

திருஞான சம்பந்தர் வலஞ்சுழியில் இருந்து பழையாறை எய்துவதற்கு அடியார்களுடன் நடந்தருளுங்கால், ஆறைமேற்றளி, திருச்சத்திமுற்றம் ஆகிய தலங்களை வணங்கி பட்டீஸ்வரம் பணிதற்கு வந்தார். அக்காலம் வெம்மை தரும் வேனிற்காலம். வெப்பம் தணிக்க விரும்பினான் இறைவன். திருஞான சம்பந்தர் நிழற்பெற முத்துப்பந்தரை அனுப்பினார் ஆண்டவன். சிவ பூதங்கள் ஞானசம்பந்தர் முடி மீதில் தம்மை அறியாதவாறு தண்தரளப் பந்தர்ப் பிடித்துப் பட்டீஸ்வரர் எம்மை விடுத்து அருள் புரிந்தார்' என்று இயம்பின சம்பந்தர் இறையருளை வியந்து முத்துப்பந்தலின் நிழலில் வந்தார். தேவர் புதுமலர் அப்பந்தரைப் பூப்பந்தராக்கியது. இறைவன் திருவடி நிழலேபோல அது சம்பந்தர்க்கு இன்பம் தந்தது. இதன் பின் ஞானசம்பந்தர் அத்திருக் கோயிற்கு சென்று இறைவனை வணங்கி பதிகம் பாடினார் என்பது பெரியபுராணம்.

நந்தி விலகிய தலம் :

முத்துப்பந்தர் பெற்ற திருஞான சம்பந்தர் வருகை தரும் காட்சியைத் தான் காணவும், தம்மைத் ஞானசம்பந்தர் தரிசிக்கவும், இறைவன்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

திருநந்தித் தேவரை விலகி இருக்குமாறு அருளியதாகப் புராணங்கள்[1] கூறும். இது சேக்கிழார் சொல்லாதச் செய்தி. இக்குறிப்பினை முன் கோபுரத்திற்கு அருகில் உள்ள நந்தியும், உள் மண்டபத்தில் உள்ள நந்தியும் விலகியதாக அமைக்கப் பெற்றுள்ள சிற்ப சிறப்பைக் காணலாம்.

"வேண்டு நந்திநீ விலகெனச் சொனாய்
பூண்ட அன்புடைப் புகலி வள்ளற்கா
மூண்ட வெவ்வினை விலகை முன்னினும்
மீண்டுய் வேணருள் பழசை எந்தையே"

என்பது மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அருளிய திருப்பழசைப் பதிற்றுப் பத்தந்தாதி ஆகும்,[2]

பட்டீஸ்வர மாஹாத்மியம் என்னும் இந்நூல் சம்ஸ்கிருத நூலின் மொழிபெயர்ப்பு ஆகும். இத்தல வரலாற்று நூல்களுள் காமதேனுவின் புத்திரிகளில் யட்டி வழிபட்டது பட்டிசரம், விமலி வழிபட்டது பழையாறை வடதளி, சபளி வழிபட்டது மேற்றளி, நந்தினி வழிபட்டது முழையூர் எனப் பழையாறையில் உள்ள தலங்கள் ஒற்றுமைப்படக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வெட்டுக்களும் பொதுச்செய்திகளும் :

பட்டீஸ்வரம் திருக்கோயிலில் உள்ளனவாக எட்டு கல்வெட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன.* பட்டீஸ்வரம் தேனுபுரீசர் கோயிலில் ஸ்ரீபலிபீடத்தில் இருக்கும் கல்வெட்டிலிருந்து பல்லவர், சோழர் கால சாசனங்கள் இல்லை

---

1. திருச்சத்தி முற்றத்திலும் நந்தி விலகியிருக்கக் காணலாம். இதனை 'பஞ்சநந்தி க்ஷேத்திரம்' என்பர். திருஞானசம்பந்தர் முத்துப்பந்தரில் வரும் கோலத்தைக் கண்டு மகிழ எல்லா நந்திகளையும் விலகியிருக்குமாறு பணித்தார் இறைவன் என்பது தலபுராணச் செய்தி. இரு நந்தி விலகியது பட்டீஸ்வரம் எல்லா நந்திகளும் விலகியது திருச்சத்தி முற்றம் என்பதே இவ்விரு தலங்களிடையின் அமையும் வேறுபாடு.

2, பழைசைப்பதிற்றுப் பத்தந்தாதி — பாடல். 89.

* A. R. E. year 1927 Ins. Nos. 257 — 261.
South Indian Temple Ins. Vol. II pages 569—571. Ins.577-78.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

என இக்கல்வெட்டிலிருந்து அறியமுடிகிறது. மூன்று சாசனங்கள் வடமொழி கிரந்த எழுத்திலும், இரண்டு தமிழிலும் ஆக ஐந்து சாசனங்கள் இக்கோயிலில் உள்ளன.

திருப்பட்டீஸ்வரத்தின் இரண்டாம் கோபுரத்திலுள்ள சாசனங்களில் ஒன்று சிதைவுற்றுள்ளது. காலம் பற்றிய குறிப்பு இல்லை. இக்கல்வெட்டு இத்திருக்கோயிலில் செய்யப்பட்ட திருப்பணிகளை உணர்த்துகிறது. இச்சாசனத்தை ஒத்ததொரு சாசனம் தேனுபுரீசர் கோயிலின் வெளிப்புறச் சுவரில் இருப்பதாகத் தென்னிந்தியக் கோயிற் சாசனத் தொகுதி கூறுகிறது. இது வடமொழி தமிழ் ஆகிய இரு மொழிப் பகுதிகளை உடையதாக தெரிய வருகிறது, முதல் பகுதியாகிய வடமொழிப் பாடல்களில், காவிரித் திருநதி பாய்ந்து அழகூட்டும் சோழநாட்டில் வாழ்வதற்கு தகுதி அற்றதாக இருந்த காடு அடர்ந்த பகுதியைத் திருத்தி நாடாக்கி வாழ்வதற்கேற்ற வளம்படைத்ததாகச் செய்து, குளம் வெட்டி கோயிலைப் பழுது பார்த்ததாக தெரியவருகிறது.

சகம் 1191 ஆம் ஆண்டில் கி.பி. 1269-ல் பகுதான்ய சம்வத்ஸரம், விருச்சிக மாதம், சுக்ல பட்சத்து துவிதியையும், ஆதிவாரமும் பெற்ற திரிவோணத்து நாளில் பாண்டிய குலபதி வள்நாட்டு ஸ்ரீபட்டீச்வரத்து ஸ்ரீ பட்டீச்வர தேவர்க்குக் கோயில் திருக்குளமும், மண்டபமும் கட்டுவிக்கப் பெற்றதாக இச்சாசனம் கூறும்.

கோனேரிப்பட்டன் வெங்கடதீக்ஷிதர் :

கோபுரத்திலுள்ள மற்றொரு வடமொழிச் சாசனம் கி.பி 1524க்கு உரியதாகும். இச்சாசனம் வசிஷ்ட கோத்ரத்தைச் சார்ந்த கோனேரிபட்டரின் மகனான வெங்கடதிக்ஷிதர் பட்டீஸ்வரத்திற்குத் தந்த கொடையினைச் சுட்டுகிறது.

மற்றொரு கல்வெட்டு இரு வடமொழிச் செய்யுட்களால் ஆகியது. இது விருத்தாசலம், கமலாலயம் (திருவாரூர்), சிதவனம் (திருவெண்காடு), மந்தரம், கைலாசம், ப்ரவயார்ணயம் (மன்னார்குடி) என்னும் தலங்களைப் புகழ்கின்றது. முன்னெழு தலங்களோடு ஒத்தப் பெருமையுடையதாகப் பட்டீஸ்வரம் புகழப்பட்டுள்ளது நோக்கற்குரியது.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பட்டீசர் மீது சிருங்காரபதம் :

தஞ்சையை அரசாண்ட மராட்டிய மன்னன் இரண்டாம் சகஜி (1684—1710) சம்ஸ்கிருதம், தெலுங்கு, இந்தி, மராட்டி போன்ற மொழிகளில் புலமைப் பெற்றவர். இவர் பல தலங்களுக்கு யாத்திரையாகச் சென்று இறைவன், இறைவி மீது பல பதங்களையும், கீர்த்தனைகளையும் அந்தந்த தலங்களில் கோயில் கொண்டுள்ள மூர்த்திகளுக்கு அர்ப்பணம் செய்துள்ளார். அவ்வாறு எழுதப்பட்ட பதங்களில் பட்டீஸ்வரர் பேரிலும் ஒரு சிருங்கார பதம் பாடியுள்ளார். இப் பதங்கள் B. 11626 என்ற எண்ணில் உள்ள ஓலைச் சுவடியில் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதன் தமிழ் வரிவடிவம்

மோடுகானிதோ ஏமி முச்சடலாடேவே
மாடலசாதனே மாலிமி லேஸெஸெடி
குறிகல வாடுவலே வச்சி
கோருலு மேனநுஞ்சி விடு
அரவதானி மோவி ரசின
காடாரலேதடே இங்கா
மட்டுமீரி நின்ன தானி
நடுநிடு போனிக தியாக
பட்டீச்வருடு கூட அதி
தொடதட்டி கூஸினா விடுவட்ட

ஆகவே தொன்மைக் காலப் பெருமைப் படைத்த இத்தலம் பற்றிய செய்திகளைத் தலபுராண வழியில் இனிக் காண்போம்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஞானநசீ ஸருக்கம்

உலகத்தார் அனைவராலும் வணங்கப்படுகின்ற அனைத்தையும் அறிந்த இறைவனை கபர்தீஸ்வரர், பசுபதீஸ்வரர், ஸௌந்தரபுரீஸ்வரர், சத்யசாகர தீர்த்தர் போன்ற புனிதமான பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறார். இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த இறைவன் உறையும் தலத்தை பட்டீஸ்வரம் என்று சுருக்கமாகக் கூறப்படுகின்றது. இது பாபத்தைப் போக்கக்கூடிய க்ஷேத்திரம். இதன் பெருமையை கேட்பதன்மூலம் புண்ணியத்தை கொடுக்கக் கூடிய க்ஷேத்திரமாகவும் விளங்குகிறது. "பட்டீஸ்வரத்திற்கு இப்பெயர் வரக் காரணம் என்ன? என்பதை அறிய நாங்கள் ஆவலாக இருக்கிறோம்" என்று சௌனகமகரிஷி சூதரிஷியிடம் கேட்கின்றார்.

சூதரிஷி கூறலானார் :— "எல்லாவிதமான உயிரினங்களும் பகை இல்லாமல் இருக்கக்கூடியதும், அனைத்துவிதமான அலங்காரங்களினால் பிரகாசிப்பவளும், சங்கரனை மகிழ்விப்பவளும், தனது தவத்தினால் சிறந்து விளங்குபவளும், தேவர்களால் பணிவிடை செய்யப்படுபவளும், உலகைக் காப்பவளும்; மரம், செடி, கொடி உருவமாக இருப்பவளுமான பராசக்தியினால் சக்தி வனம் என்று அழைக்கப்படும் மிகப்பழமையான க்ஷேத்திரத்தைப் பற்றிக் கூறுகின்றேன்" என்று கூறத்தொடங்கினார்.

பராசக்தி, பகவான் சங்கரனை நினைத்துத் தவம்புரிவதற்காகக் காவிரியினுடைய தெற்குக் கரையில் குயில்களின் ஓசையால், மரங்களுடன் அழகாக விளங்கக்கூடிய சக்திவனம் என்று அழைக்கப்படும் இடத்தில் தவம் செய்தாள். பராசக்தியின் தவத்தினால் மகிழ்ச்சி அடைந்த பகவான் சங்கரன் ஜடாமுடியுடன் உத்தமமான அந்த இடத்தில் தோன்றினார். காமதேனுவும்கூட பராசக்திக்கு உதவிபுரிவதற்காகத் தனது மகளான பட்டியை அனுப்பினாள். உலகத்தாரால் வணங்கப்படுகின்ற காமதேனுவினுடைய மகள்கள் நால்வர் பட்டி, சபலா, விமலா, நந்தினி என்பவர்கள் ஆவர். அவர்களால் மக்களும் உலகங்களும் காப்பாற்றப்பட்டன. தேவிக்குப் பணிவிடை செய்வதற்காகத் தாயால் தூண்டப்பட்ட பட்டி, உலகத்தாரால் வணங்கப்படுகின்ற தேவி தவம் செய்யும் இடத்திற்கு வந்தாள்.

அந்த இடம் காவிரியினுடைய தெற்குக் கரையில், குயில்களின் ஓசையால், மரங்களுடன் அழகாக விளங்கக்கூடிய சக்திவனம் என்று அழைக்கப்படும் இடமாகும். மேலும் ஜம்பு, கதம்பம், ஆம்ரம் முதலான பழங்களால் எப்போதும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் மரங்களுடன் கூடிய சக்தி வனத்தை அடைந்து, சிவனுக்குப் பிரியமானவளான, தவம் செய்யக்கூடிய பராசக்தி தேவியை வணங்கி, அவளுடைய அன்பை முன்வைத்து, அவளுக்குப் பணிவிடைகள் செய்தாள்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

குற்றமற்ற அந்த இடத்தினுடைய வைபவத்தைப் பார்த்துப் பட்டியும் தானாகவே மண்ணினால் லிங்கம் செய்து, சிவலிங்கபூஜை செய்யவேண்டுமென எண்ணினாள். சாஸ்திரங்களின் பிரமாணமான வழியையும், உயர்ந்ததான வேதத்தின் வழியையும் பின்பற்றி சிவாகம முறைப்படி விக்னேச்வரர் முதலியவர்களுடன் அந்த லிங்கத்தைப் பூஜை செய்தாள். தினமும் முறைப்படி பாலினாலும், தீர்த்தத்தாலும் அபிஷேகம் செய்வதற்காக லிங்கத்தினுடைய சந்நிதியில் தனது ஞானயோகத்தின் மூலம் நான்கு மூலைகளிலும் அலங்காரங்களுடன் சேர்ந்து இருக்கக்கூடிய ஒரு குளத்தை ஏற்படுத்தினாள். அதில் கங்கை முதலிய அனைத்து நதிகளினுடைய தீர்த்தத்தையும் சேர்த்து, அதற்கு ஞானபுஷ்கரிணி என்று பெயர் சூட்டினாள். பட்டியினாலே நன்கு அர்ச்சிக்கப்பட்ட அந்த லிங்கம் மிகவும் பிரசித்திபெற்றதாக ஆயிற்று, எவர் ஒருவர் அந்த லிங்கத்தினுடைய தரிசனத்தைச் செய்கின்றார்களோ அந்த நொடிப் பொழுதே சிவஞானத்தினுடைய சித்தி அவர்களுக்கு ஏற்படுகின்றது, கோடி ஜன்மங்களில் சேர்த்த புண்ணியத்தால் ஞானபுஷ்கரிணியினுடைய ஸ்நானமும், பட்டியினுடைய தரிசனமும் கிடைக்கிறது மேலும் பல ஜன்மங்களில் செய்த ஸ்ரௌத. ஸ்மார்த்த கர்மங்களினுடைய பலனாலும் கிடைக்கின்றது. சிவனுடைய இடத்தில் வசிப்பதால் "சிவஞானம்" ஏற்படுகிறது. சக்தீஸ்வரன், பட்டீஸ்வரன், கபர்தீஸ்வரன், தர்மேஸ்வரன் ஆகியோரை ஒரே நாளில் எவர் தரிசிக்கிறார்களோ அவர்களுக்கு 'முக்தி' கிட்டுகிறது.

பட்டி தனது ஞானயோகத்தால் எந்த ஒரு ஏரியை உண்டாக்கியதோ, அந்த நீரினால் பட்டீஸ்வரரை எவர் தினந்தோறும் அபிஷேகம் செய்கின்றாரோ அந்த மனிதர் கங்கை நீரினால் செய்த அபிஷேகத்தினுடைய பயனைப் பெறுகின்றார், 'ஞானவாபி'யினுடைய பெருமையை யாராலும் இவ்வளவுதானென்ன வர்ணிக்க இயலாது. மேலும் ஜம்பூத்வீபத்திற்கு நடுவில் கர்மபூமியில் குறிப்பாக கேதாரம். நைமிசாரண்யம், காசி, குருக்ஷேத்திரம், அவந்திகா, பிரயாகை, கயா முதலிய பல புண்ணிய ஸ்தலங்களைக்கூறி, அவைகளுக்குள்ளும் முக்கியமான மூன்று இடங்களாக, 'சக்தீஸ்வம்' மகாதேவனை பக்தியோடு பூஜை செய்கின்ற 'தர்மேஸ்வரம்', காமதேனுவின் மகளால் அர்ச்சனை செய்யப்பட்ட 'பட்டீஸ்வரம்' என்பவை கூறப்படுகின்றன.

பராசக்தியினுடைய தவத்தினால் இடா, பிங்களா, சுஷும்னா, விராட புருஷன்' என்ற பெயர்களுடன் உலகிற்கு ஆதாரமான உருவங்கள் நிலை நிறுத்தப்பட்டு இருக்கின்றன. இந்த க்ஷேத்ரம் ஞானத்தைக் கொடுக்கக் கூடியதும். உலகிற்கெல்லாம் புண்ணியமானதுமாகும். இந்த க்ஷேத்திரத்திற்கு இணையாக இதற்கு முன்பும், பின்பும் கிடையாது, இந்த க்ஷேத்திரத்தின் பெருமையை யாராலும் வர்ணிக்க முடியாது. பட்டீஸ்வரத்தின் பெருமையை எந்த சிறந்த மனிதன் கேட்கிறானோ, ஞானசரசில் குளித்து சிவனை வணங்குகின்றானோ அவர்கள் அனைவரும் முக்தியை அடைகிறார்கள்,

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

எதிர்பார்க்கின்ற பலனைக் கொடுக்கக்கூடிய பட்டீஸ்வரரை மிருகண்டு முனிவரின் மகனும் நன்கு அர்ச்சித்து, கிடைப்பதற்கு அரிதான சிவஞானத்தை அடைந்தார்,

சௌனகர், சூதரிடம் உலகத்தார் அனைவராலும் பூஜிக்கப்படுகின்ற வியாசருடைய சீடரான உங்களால் இவ்வுலகிலுள்ள அனைத்து உயிர்களும் காப்பாற்றப்படுகின்றன. உயிரினங்களிலேயே அதமமான நாயும்கூட இங்கு எவ்வாறு மோக்ஷத்தைப் பெற்றது என்பதைத் தாங்கள் எங்களுக்குக் கூறுங்கள் என்று கேட்க, சூதரும் கூறுகிறார்.

அனைத்து சௌபாக்யங்களுடன் கூடிய மாளவம் என்ற பெயருடைய நாடு இருக்கிறது. அந்நாடு அனைத்து செல்வங்களுடன், அந்தணர்களின் இருப்பிடமாகவும் இருந்தது. வேத கோஷங்களுடன் கூடியதாகவும், அக்னி ஹோத்ரம், ஔபாசனம், தேவபூஜை செய்பவர்களை கொண்டதாகவும் எல்லா செல்வங்களுடனும், தானியங்களுடனும், தினமும் விருந்தோம்பல் செய்பவர்களைக் கொண்டதாகவும் பல்வேறு தேசங்களில் உள்ளவர்கள் வாழும் இடமாகவும் இருந்தது. அங்கு ஆங்கிரச குலத்தில் தோன்றிய உத்தமமான அந்தணன் மேதாதிதி வேதங்களைப் பயின்று, ஜபம்-தியானம் முதலியவற்றில் ஈடுபட்டு தன்னுடைய அனுஷ்டானங்களை கடைபிடிப்பவனாக மகன்-பேரன் முதலியவர்களோடு கூடியவராக வாழ்ந்துவந்தார்.

அவரிடம் மூன்று சீடர்கள் வேதம் பயில்பவர்களாக இருந்தனர். இதற்கிடையில் ப்ராசேதஸ் என்ற முனிவர் யாகம் ஒன்றை செய்வதற்கு எண்ணினார். அதற்காக மேதாத்தியினுடைய சிஷ்யர்களை அனுப்புமாறு கேட்டார். மேதாத்தியும் தன்னுடைய சீடர்களை ப்ராசேதஸ்ஸுடன் அனுப்பி வைத்தார். தானும் அந்த யாகத்திற்குச் செல்ல விரும்பி தன்னுடைய ஆஸ்ரமத்தில் உள்ள பசுக்களைக் காப்பதற்கு தர்மசர்மா என்ற சீடனை நியமித்துவிட்டு, ப்ராசேதஸ்ஸினுடைய யாகத்திற்குத் தானும் புறப்பட்டார். யாகங்களை முடித்துக்கொண்டு ஏழு நாட்கள் கழித்து திரும்ப ஆசிரமத்திற்கு வந்தார். பசுக்கள் மிகவும் மெலிந்திருப்பதைப் பார்த்து, தன்னுடைய சீடனை நோக்கி மிகுந்த துக்கத்தோடு, "நீ சரியாக உணவு வழங்கவில்லை. ஆகையால் பசு மிகவும் இளைத்துவிட்டது. இளைத்த பசுவைக்கொண்டு யாகத்திற்குத் தேவையான செயல்களைச் செய்ய இயலாது. பசு உன்னால் காப்பாற்றப்பட வில்லை. ஆகையால் நீ நாயாகப் பிறப்பாயாக" என்று சாபமிட்டார். நீ செய்த முட்டாள்தனமான செயலினால் பசியினாலும், தாகத்தினாலும் பிடிக்கப்பட்டு அங்குமிங்கும் திரிவாயாக என்று கூறினார். இதனைக் கேட்டு தர்மசர்மா குருவை சாந்தப்படுத்தி, தன்னால் புற்கள் அளிக்கப்பட்ட விபரத்தைக் கூறினான், மேதாத்தியும் சீடனிடம் பசுக்களின் ஜாதி தர்மத்தை

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

கூறுகின்றேன். கேள், கையால் கொடுப்பது, வாயில் கொடுப்பது என்று இருவிதமான தானங்கள் உள்ளன. நீ அவற்றின வாயில் கொடுக்காமல் உன்னால் அவற்றிற்கு முன்பு வைக்கப்பட்டது. ஆசையால் தெரியாமல் ஏற்பட்ட இந்தப் பிழைக்கும் நீ பொறுப்பேற்றே ஆகவேண்டும். இனி விதி வழியே செல். சிறிது காலம் அனுபவிக்கவேண்டியதை அனுபவித்தே தீரவேண்டும். ஆனால் விதியைவிட பலமுடையது சிவனுடைய கட்டளை. அதிலிருந்து ஒருபோதும் மீறமுடியாது. அங்கு உனக்கு முக்தி கிடைக்கும் என்றார்.

மேலும் காவிரியினுடைய தெற்குக் கரையில் மூன்று உலகிலும் புகழ் பெற்றதும், எல்லா பாபங்களையும் போக்கக்கூடியதுமான சக்திவனம் எனினும் பட்டீஸ்வரம் இருக்கிறது. அங்கு காமதேனுவினுடைய மகளால் ஏற்படுத் தப்பட்ட 'ஞானசரஸ்' இருக்கிறது. அதில் நீராடுபவர்களுக்கு புண்ணியத் தையும் சிவஞானததையும் கொடுக்கக்கூடியது. அந்த நதியின் பெருமையை யாராலும் வர்ணிக்க முடியாது. அந்த நதியில் நீராடுவதனால் அந்த நொடி யிலேயே அந்தப் பாவங்கள் ஒழிந்துவிடுகின்றன. பசுவினால் பூஜிக்கப்பட்ட அந்த சிவனும் மகிழ்ச்சியடைவார். இதில் சிறிதும் ஐயமில்லை. இது உண்மை என்று கூறி பர்ணசாலைக்குள் சென்றார். தர்மகர்மாவும் அந்த நொடிப் பொழுதே சாபத்தினால் நாய் உருவை அடைந்தான். தனது குருவினால் கூறப்பட்ட வழியை நினைவில் கொண்டு சென்றான். பன்னிரண்டாவது ஆண்டு முடிவில் புண்ணியமான நதியாகிய காவேரியை அடைந்தான். அங்குள்ள ஆஸ்ரமத்தின் அருகில் தியானத்தில் இருக்கும் நிர்குண பிரம்மத்தின் அருகில் சென்று துக்கத்தோடு அழுதான். கருணையோடு கூடிய, உண்மை களைத் தெரிந்த எல்லாவற்றையும் ஒன்றாகப் பார்க்கக்கூடிய அந்த முனிவர் தனது ஞான திருஷ்டியால் நடந்தவைகளைத் தெரிந்துகொண்டு பின்வரும் வார்த்தைகளைக் கூறினார்.

நாய் உருவை அடைந்த தாங்கள் காவிரியின் தீரத்தில் உள்ள சக்தி வனத்தை நோக்கிச் செல்லுங்கள். அங்கு பட்டீஸ்வரம் என்னும் இடத்தில் காமதேனுவினுடைய மகளால் ஏற்படுத்தப்பட்ட மிகச் சிறந்த 'ஞானபுஷ்கரிணி' என்ற பெயரை உடைய மூவுலகிலும் பெயர் பெற்ற தீர்த்தம் உள்ளது. அது நிச்சயமாக முக்தியைக் கொடுக்கக் கூடியது. காவிரியின் தீரத்தை அடைந்து வன்னி மரத்தினுடைய அடியில் ஒரு நிமிடம் நின்று அந்தணர்களுடைய ஸ்நானத்தினால் புனிதமான அந்த தண்ணீர் உன்னுடைய தலையில் விழுவ தினால் உனக்கு பூர்வ ரூபம் கிடைக்கும், பிறகு அந்த தீர்த்தத்தினுடைய மகிமையினை நீ அறிந்து கொள்வாய். அங்கு ஸ்நானம் செய்து 'ப்ரும்மஞானம்' என்ற மந்திரத்தினால் பட்டீஸ்வரரை வணங்கிவிட்டு மேலும் ப்ரதட்சிணம் செய்து, 'ஞானேஸ்வரி' தேவியையும் வணங்கி, தகுந்த காலத்தில் நன்கு பூஜை செய்து பிறகு வன்னி மரத்தினுடைய அடியை

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

அடைந்து பஞ்சாட்சர ஜபத்தைச் செய். பரத்வாஜரிடமிருந்து ரகசியத்தை அறிந்த நீ நிச்சயமாக சம்சார பந்தத்தில் இருந்து விடுபட்டு சாயுஜ்ய பதவியை அடைவாய் என்றார். முனிவர் கூறியபடி தர்மசர்மாவும் முறைப்படி சக்திவனம் என்று அழைக்கக்கூடிய புண்ணியமான பட்டீஸ்வரத்திற்குச் சென்று 'ஞான புஷ்கரிணியை' அடைந்து, வன்னி மரத்தின் அடியில் ஒரு நிமிடம் நின்று, தன்னுடைய துக்கத்தைப் போக்கிக் கொள்வதற்காக குருவினால் பெறப்பட்ட வாக்கியங்களை நினைத்து 'ஞானபுஷ்கரிணி' தீரத்தில் அந்தணர்களில் சிறந்த வனான நாயுருவில் இருக்கக்கூடிய அவனுடைய தலையில் தண்ணீர் துளிகள் பட்டவுடனேயே முக்தியானது ஏற்பட்டது.

முன்போன்ற நல்ல உருவை அடைந்து சூரியனுடைய ஒளியைப்போன்று நன்கு பிரகாசித்தான். குரு சாபத்திலிருந்தும், பசுவிற்கு உணவு கொடுக்காத தோஷத்தில் இருந்தும் விடுபட்டான் என்று சௌனக முனிவருக்கு, சூத முனிவர் கூறி முடித்தார்.

மீண்டும் சூத முனிவர் கூறினார். கோதாவரியின் தெற்குக் கரையில் புனிதமான அக்ரஹாரத்தில் பிரம்மபுரம் என்ற ஊரில் அக்னிசுதன் என்ற சிறந்த அந்தணர் நிறைந்த செல்வங்களுடன் வாழ்ந்து வந்தார். அவருடைய பூர்வஜென்ம வினைகளினால் அவனது செல்வங்கள் அனைத்தும் அழியத் தொடங்கின. விதியினால் ஏற்பட்ட மாற்றத்தை யாராலும் மாற்றவோ, தடுக்கவோ முடியாது. ஆகையால் அவரும் தரித்திரராக ஆனார். ஒவ்வொரு இடமாக யாசகம் செய்து வாழ்ந்து வந்தார்.

ஒரு சமயம் தெய்வ வசத்தால் தீர்த்த யாத்திரை செல்பவர்களுடன் சேர்ந்து பூர்வஜென்ம புண்ணியத்தினால் தெற்கு நோக்கி சென்று புனிதமான காவேரியை அடைந்தார். எந்த ஒரு ஜலத்தில் மூழ்குவதால் பரமகதியை அடைந்து முக்தியைப் பெறுகின்றார்களோ அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த காவிரியை அடைந்து அதனுடைய தெற்குக் கரையில் எந்த ஒரு மிகச் சிறந்த சக்திவனம் உள்ளதோ அந்த இடத்திற்கு பூர்வ ஜன்ம புண்ணியத்தினால் அதனை அடைந்தார் தீர்த்தயாத்திரை சென்றவர்களோடு ஒரு அந்தணன் வீட்டில் மதிய வேளையில் பிக்ஷாடனத்தைச் செய்து நல்ல காய்கறிகளோடு சாப்பிட்டுவிட்டு பசி நீங்கி மீதம் இருந்தவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொண்டு ஒரு மரத்தினடியில் அமர்ந்தார், அந்த சமயத்தில் குற்றமற்ற ஒரு யோகி தாகத்தோடு அவர் அருகில் வந்தார் அவரைப் பார்த்து கருணையுடன் கூடிய முகத்தோடு மீதம் இருந்த அன்னத்தை அக்னி சுதன் என்ற இந்த அந்தணர் அந்த முனிவருக்குக் கொடுத்தார். அந்த யாசகர் கொடுத்த அன்னத்தினால் முனிவர் மகிழ்ச்சி அடைந்தார். அதனால் மூவுலகமும் மகிழ்ச்சி அடைந்தது அந்தப் புண்ணிய பயனால் அவர் மகாராஜாவாக மாறினார். இறைவன் பட்டீஸ்வரருடைய கருணையினால் மேலும் இந்த

 CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

க்ஷேத்திரத்தின் மகிமையினாலும் அந்த அந்தணன் அக்னிசுதன் இவ்வுலகில் அனைத்து விதமான போகங்களையும், சௌகரியங்களையும் அனுபவித்து முடிவில் சிவபுரம் அடைந்து, சிவசாயுஜ்யத்தையும் பெற்றார். அன்னதானத்தின் மகிமை வேறு எந்த தானத்திலும் கிடையாது. அன்னதானம் செய்யப்பட வேண்டும். குறிப்பாக சிவ க்ஷேத்திரங்களில் அணு அளவு புண்ணியம் செய்தாலும் கூட அது கோடி மடங்காக அதிகரித்து சிவசாயுஜ்யத்தைக் கொடுக்கின்றது.

இத்தலத்தில் புத்திரப்பேறு இல்லாதவருக்குப் புத்திரப்பேறு கிடைக்கும் என்றும், இத்தலத்தில் காயத்ரீ ஜபங்களைச் செய்வார்களே யானால் அது பல மடங்கு பலனைக் கொடுக்கவல்லது என்றும், சூத முனிவர் கூறினார். இதனை செவிமடுத்த சௌனகர் இத்தலத்தில் வழிபட்டோருக்கு புத்திரப்பேறு கிடைக்குமா என்று வினா எழுப்பினார். இவ்வினாவிற்கு விடையாக சூத முனிவர் கூறலானார்.

காம்பில்யம் என்னும் நகரத்தில் சௌர வம்சத்தில் தோன்றிய சித்திரசேனன் என்ற அரசன் தேவபூஜைகளில் ஈடுபட்டவனாகவும், நியாயத்தை அறிந்தவனாகவும், நற்குணங்கள் உடையவனாகவும். தீர்க்கதரிசியாகவும், அரசர்களுள் சிறந்தவனாகவும் விளங்கி வந்தான். அவன் தனக்குக் குழந்தை இல்லாத வருத்தத்தை தூய்மையான அந்தண சிரேஷ்டர்களிடம் கூற, அப்போது ஹரீதகர் என்பவர் எழுந்து அரசரிடம் கூறினார்; மகாராஜா எல்லா தர்மங்களும் அறிந்தவரான உமதுடைய விருப்பத்தினை நான் அறிவேன். தாங்கள் நிச்சயமாக புத்ரனைப் பெறுவீர். அதற்கான உபாயத்தைக் கூறுகிறேன். அவரவர் செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது. பிராயச்சித்தம் செய்தால்தான் பாவங்கள் ஒழியும். சிறந்த க்ஷேத்திரத்தில் வசித்தவன் எவருமே நரகத்தை அடையமாட்டான். புண்ணியமான பாரத வர்ஷத்தில் மகத்துவம் பொருந்திய ஜம்பூத்வீபத்தில் மகாபாபங்களைப் போக்கவல்ல புண்ணிய க்ஷேத்திரங்கள் உள்ளன. இப்பொழுது உன்னுடைய புண்ணியத்தினால் எனது குருவினால் கூறப்பட்ட ஒரு விஷயம் உமக்குத் தெரிவிக்கிறேன்.

காவிரியின் தெற்குக் கரையில் மூவுலகங்களிலும் பிரசித்திபெற்ற காமதேனுவினுடைய மகளால் ஏற்படுத்தப்பட்ட உயர்வான தீர்த்தம் உள்ளது. இத்தகு "ஞானபுஷ்கரிணி" என்று பெயர். இது மூவுலகிலும் பிரசித்தி பெற்றதாகவும், அதனைப் பார்ப்பதனால் மட்டுமே மக்கள் பாவம் என்னும் நிலையிலிருந்து விடுபடுகிறார்கள். ஞானத்தையும், மோக்ஷத்தையும் தர வல்லதும், ப்ரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுதலை அளிப்பதுமான வன்னி மரத்தின் அடியில் உள்ள திர்த்தத்தில் முறைப்படி மனைவியுடன் ஸ்நானம் செய்து விரதத்தை மேற்கொள், தேவனுக்கும் தேவிக்கும் மூன்று ப்ரதக்ஷிணங்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

களைச் செய்து, தனித்தனியாக ஐந்து நமஸ்காரங்களைச் செய்து பக்தியோடு பட்டீஸ்வரரை வேண்டி வன்னி மரத்தின் அடியை அடைந்து, ஒரு கை அளவு நீரை எடுத்து மனைவியைக் குடிக்கச் செய்து, பூசணிக்காய் தானம் செய்ய வேண்டும். இவ்வாறு எட்டு தினங்கள் செய்தால் நிச்சயமாக நீ குழந்தையை அடைவாய். காமதேனுவினால் அர்ச்சிக்கப்பட்ட லிங்கம் விரும்பியவற்றைக் கொடுக்கக்கூடியது. அதனால் இப்பூஜையினால் எல்லா ஸித்திகளும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை என்று ஹாரித முனிவர் கூறினார்.

முனிவரின் கூற்றுப்படி மன்னன் சித்ரசேனன் தனது மனைவியுடனும், தனது சேனைகளுடனும், பல க்ஷேத்திரங்களுக்கு சென்று நீராடி, வணங்கி முறைப்படி தேவியையும் வணங்கி எங்கு பட்டீஸ்வரர் இருக்கின்றாரோ அந்த சக்திவனத்தை அடைந்து ஞானபுஷ்கரணியின் கரையில் அமிர்தத் துளியினால் உண்டான வன்னி மரத்தை அடைந்து தேவ உருவிலிருக்கும் அதனை வணங்கி மூன்று பிரதட்சிணங்களைச் செய்து பட்டீஸ்வரரை வணங்கி மறுபடியும் தீர்த்தக்கரையை அடைந்து, அந்தணர்களால் ஆமோதிக்கப்பட்டு, முறைப்படி அந்த மிகச் சிறந்த புண்ணியங்களைக் கொடுக்கக்கூடிய ஸ்தலத்தில் சேனைகளை விட்டுவிட்டு, வெளியே சென்று புல், அக்ஷதை, எள்ளு இவைகளோடுகூட சங்கல்பத்தை செய்து நாபி வரை மூழ்கும் ஜலத்தில் நின்றுகொண்டு மனைவியோடுகூட அந்த அரசன், 'பிருப்மஞான' மந்திரத்தினால் ஞான புஷ்கரிணி நீரில் தர்ப்பணத்தைச் செய்து, கரையை அடைந்து புத்ரகாமேஷ்டியைச் செய்தார். முனிவரால் கூறப்பட்டதையும் முறைப்படி அந்த விருத்தாந்தத்தையும் எண்ணி ஏராளமான தானங்களைச் செய்தார்.

யாகத்தின் முடிவில் அவப்ருத ஸ்நானம் (யாக நிறைவை குறித்த நீராட்டு) செய்தபின் எம்பெருமான் ஜோதியாகத் தோன்றி உன்னுடைய யாகத்திற்கும், தானத்திற்கும், விரதத்திற்கும் மகிழ்ந்து உன் விருப்பப்படியே புத்திரப்பேற்றை அளிக்கிறேன். உனக்கு நான்கு ஆண்மக்கள் பிறப்பார்கள் என்று வரம் கொடுத்தார். தை மாதம், சுக்லபக்ஷத்தில் கொடி ஏற்றி, உத்திர நக்ஷத்திரத்தில் முறைப்படி வாஸ்து பூஜைகள் செய்து பிரும்மோத்சவத்தை செய்தான். தீர்த்தவாரி தினத்தன்று ஞானவாபியில் புஷ்ய நக்ஷத்திரத்தில் தீர்த்தோத்சவத்தைச் செய்தான், அச்சமயம் அக்குளத்தில் எவர் ஸ்நானம் செய்கிறார்களோ அவர்கள் அசுவமேதயாகம் செய்த பயனை அடைவார்கள். அச்சமயம் பசு, பூமி, எள், தங்கம் முதலியவற்றை தானம் செய்கிறார்களோ அது ஒன்றிற்கு கோடி மடங்கு புண்ணியத்தைக் கொடுக்கிறது. இதுபோலவே ரதோத்சவத்தில் அன்னதானம் செய்கிறவர்கள் பூமியில் அனைத்து செல்வங்களையும் அனுபவித்து இறுதியில் சிவபுரத்தை அடைவர். ம்க்களுக்கு தண்ணீர்ப்பந்தல் மூலம் தண்ணீர் வழங்கியவர்கள்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தேவலோகத்தில் அமிர்தத்தை கொடுத்தவர்கள் ஆவார்கள். தங்கத்தைத் தானமாகக் கொடுத்தவர்கள் தேவலோகத்தையும், தாம்பூலத்தைத் தானமாகக் கொடுத்தவர்கள் குபேரனுடைய லோகத்தையும், பூமியைத் தானமாகக் கொடுத்தவர்கள் பூமியை ஆள்பவராகவும், தானியங்களைத் தானமாகக் கொடுத்தவர்கள் உலகிற்குத் தலைவனாகவும். பழவகைகளைத் தானமாகக் கொடுத்தவர்கள் நரேந்திர பதவியையும் அடைகிறார்கள் என்று சிவபெருமான் முன்பு மன்னனுக்கு வரம் அளித்தபடி மக்கள் பிரும்மோத்ஸவத்தில் தானமாக அளித்துப் பேறு பெருகிறார்கள். இப்படி பிரும்மோத்சவம் முதலியவற்றைச் செய்த சித்திரசேனன் சிவனருளைப் பெற்று சிவலோகத்தை அடைந்தான்.

இக்கதையைக் கேட்டு மகிழ்ந்த சௌனகர், சூத முனிவரே இத்தலத்தில் காயத்ரீ மந்திரத்தை ஜபித்த விஸ்வாமித்திரர் பிரும்மதத்துவத்தை எப்படி உணர்ந்தார், இதனை விளக்கமாகக் கூறவேண்டும் என்று கேட்டார். உடனே சூத முனிவர் பரமமங்களமான விஸ்வாமித்திரரின் சரித்திரத்தை உமக்குக் கூறுகின்றேன் என்று கூறலானார்.

விஸ்வாமித்திரரும், வசிஷ்டரும் காமதேனுவின் பொருட்டு சண்டை புரிந்து கொண்டனர். விஸ்வாமித்திரரான கௌசிகர் படைபலத்தாலும், போர் பயிற்சியாலும் வசிஷ்டரை வெல்ல முடியாமல் எப்படியாயினும் காமதேனுவை நான் வசமாக்கிக் கொள்வேன் என்று சூளுரைத்து கடுந்தவம் புரிந்தார். எதன் பொருட்டு தனக்கும், வசிஷ்டருக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டதோ அந்த காமதேனுவால் ஏற்படுத்தப்பட்ட தலத்திலேயே தவம் இயற்றுவது என்று தீர்மானித்து அத்தலத்தில் தவம் மேற்கொண்டார். பல ஆண்டுகளுக்குப் பின் விஸ்வாமித்திரர் காயத்ரீ மந்திரத்தின் சித்தியைப்பெற்று பிரும்ம ரிஷியாகவும் ஆனார். அபபோது பட்டீஸ்வரப் பெருமான் அவர் முன் தோன்றி கௌசிக முனிவா ! உன்னுடைய தவத்தால் நான் மகிழ்ந்தேன். நீ விரும்பிய காமதேனுவின் அருள் உனக்குக் கிடைக்க வேண்டுமாயின் காமதேனுவினரல் அர்ச்சிக்கப்பட்ட லிங்கத் திருமேனியை வழிபாடு செய் அவரே உன்னுடைய விருப்பத்தை பூர்த்தி செய்வார் என்று கூறி மறைந்தார்.

சிவபெருமான் திருவருள்படியே பட்டீஸ்வர லிங்கத்தை அபிஷேக ஆராதனைகளைச் செய்து மீண்டும் தவத்தில் ஈடுபட்டார் விஸ்வாமித்திரர். இவருடைய கடுந்தவத்தால் மகிழ்ந்த காமதேனுவும், வசிஷ்டரும் மற்றும் தேவர் குழாத்துடன் காட்சி அளித்து அருள்பாலித்தனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தலம் பட்டீஸ்வரம். விரும்பி வேண்டு பவர்களுக்கு அவர்களது விருப்பங்களை நிறைவேற்றும் தலமாக விளங்குகிறது பட்டீஸ்வரம். இத்தலத்திற்கு நாமும் சென்று இறைவனை வழிபட்டு சிவனருள் பெருவோமாக.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ पट्टीश्वरमाहात्म्यम् ॥

शौनक उवाच —

सूत सर्वज्ञ भगवान् सर्वलोक नमस्कृत ।
कपर्दीश्वरमाहात्म्यं श्रुतं विस्तारशोऽधूना ॥

श्रीमत्पशुपतीशस्य धर्मेशस्य तथैव च ।
श्रीसौन्दरपुरेशस्य माहात्म्यमतिपावनम् ॥

सत्यसागरतीर्थस्य माहात्म्यं चातिपावनम् ।
एतस्मिन्नन्तरे सूत कथितं संग्रहेण तु ॥

पट्टीश्वरसमाख्यानं पवित्रं पापनाशनम् ।
तदद्य विस्तरात् ब्रूहि श्रवणात् पुण्यदायकम् ॥

भवद्विधा महात्मानो लोकानुग्रहणे रताः ।
पवित्रयन्ति सञ्चारात् पुराणकथनेन च ॥

ते नाहं प्रार्थयाम्यद्य पुराणश्रवणोत्सुकः ।
श्रीमत्शक्तिवने पुण्ये पवित्र लोकपूजिते ॥

अस्ति पट्टीश्वरमिति व्याहृतं लोकपूजितम् ।
तत् कारणं ममाचक्ष्व लोकानुग्रहणे रत ॥
मुनयस्त्वामुपासन्ते वीतरागा विमत्सराः ॥

